# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2025 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

---

[ 2025 ஆம் ஆண்டு மாச்சு 20 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது ]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2025, மாச்சு 21 ஆம் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குள்** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 18.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்*

*[2025ஆம்ஆண்டுமாச்சுமாதம்20ஆம்திகதிஅத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

ச.வ.-ஓ. 82/2024

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** (1) இச்சட்டம் 2025 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் 2025, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 150 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தின் 150 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அப்பிரிவின் (2அ) என்னும் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் -

(அ) "ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத தாகவிருப்பின்," என்னும் சொற்களுக்குப் பதிலாக "2025, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னரான ஒரு வரிமதிப் பீட்டாண்டுக்காக அறுபதாயிரம் ரூபாவை விஞ்சாததாகவிருப்பின் அல்லது 2025, ஏப்பிறல் 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஒரு வரிமதிப்பீட்டாண்டுக்காக ஒரு இலட்சம் எண்பதாயிரம் ரூபாவை விஞ்சாததாக விருப்பின்," என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(ஆ) அப்பந்திக்கான காப்புவாசகத்தில்,"ஏதேனும் காலாண்டுக்காக இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாததுமான" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2025, ஏப்பிறல் 1 ஆந்தேதிக்கு முன்னரான ஒரு

வரிமதிப்பீட்டாண்டுக்காக அறுபதாயிரம் ரூபாவை அல்லது ஒரு காலாண்டுக்காகப் பதினையாயிரம் ரூபாவை விஞ்சாதது மான, அல்லது 2025, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக ஒரு வரிமதிப்பீட்டாண்டுக்காக ஒரு இலட்சம் எண்பதாயிரம் ரூபாவை அல்லது ஏதேனும் காலாண்டுக்காக நாற்பத்தையாயிரம் ரூபாவை விஞ்சாததுமான" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "மீளளிப்பு" என்னும் சொல்லுக்குப் பதிலாக "இரண்டாயிரத்து இருபத்திநான்காமாண்டு ஏப்பிறல் 1 ஆந்தேதிக்கு முன்னர் ஒரு மீளளிப்பு" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(4) இரண்டாயிரத்து இருபத்திநான்காமாண்டு ஏப்பிறல் 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பாக ஒரு மீளளிப்பு அல்லது வரவு,-

(அ) இச்சட்டத்தின்கீழ் வரி விபரத்திரட்டொன்றைக் கோப்பிடும்படி வரிசெலுத்துநர் தேவைப்படுத்தப்படுமிடத்து, இயைபான வரிமதிப்பீட்டாண்டின் கடைசித் தேதியிலிருந்து முப்பத்தாறு மாதங்களினுள்; அல்லது

(ஆ) அத்தகைய மீளளிப்பு அல்லது வரவு ஆணையாளர் தலைமையதிபதியின் முனைப்பின்மீது செய்யப்படுமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள்,

வரிசெலுத்துநர் அத்தகைய மீளளிப்புக்காக அல்லது வரவுக்காக விண்ணப்பித்தால் மட்டுமே இப்பிரிவின்கீழ் செய்யப்படலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்

3. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டவணையின் 1 ஆம் பந்தியில்-

(அ) அப்பந்தியின் (1இ) என்னும் உட்பந்தியில், "2023, ஏப்பிறல் 1 ஆந்தேதியிலிருந்து" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2023, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து, ஆனால் 2025, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்குமுன்னர்" என்னும் சொற்களையும் எண் களையும் இடுவதன்மூலமும்;

(ஆ) அப்பந்தியின் (1இ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(1ஈ) இரண்டாம் உட்பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய,2025,ஏப்பிறல் 1 ஆந்தேதியிலிருந்து தொடங்குகின்ற ஒரு வரிமதிப்பீட்டாண்டுக்காக ஒரு வதிவுள்ள அல்லது வதிவற்ற தனி யாளின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்துக்குப் பின்வரும் வீதங் களில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்:-

| *வரி விதிக்கப் படற்பாலதான வருமானம்* | *செலுத்தப்படற்பாலதான வரி* |
|---|---|
| 1,000,000 ரூபாவை விஞ்சாத | ரூபா 0 க்கு விஞ்சுதலான தொகையின் 6% |
| 1,000,000 ரூபாவை விஞ்சிய ஆனால் 1,500,000 ரூபாவை விஞ்சாத | 60,000 ரூபாவும் 1,000,000 ரூபாவை விஞ்சுகின்ற தொகையின் 18 % உம் |
| 1,500,000 ரூபாவை விஞ்சிய ஆனால் 2,000,000 ரூபாவை விஞ்சாத | 150,000 ரூபாவும் 1,500,000 ரூபாவை விஞ்சுகின்ற தொகையின் 24% உம் |
| 2,000,000 ரூபாவை விஞ்சிய ஆனால் 2,500,000 ரூபாவை விஞ்சாத | 270,000 ரூபாவும் 2,000,000 ரூபாவை விஞ்சுகின்ற தொகையின் 30% உம் |
| 2,500,000 ரூபாவை விஞ்சிய | 420,000 ரூபாவும் 2,500,000 ரூபாவை விஞ்சுகின்ற தொகையின் 36 % உம்; |

".

(இ) அப்பந்தியின் (2) ஆம் உட்பந்தியின் (இ) என்னும் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன்மூலமும்:-

"(இ) உட்பந்தி (4) இல் குறிப்பீடு செய்யப்பட்ட தொழில் வருமானத்தின் வகைக்குப் பின்வரும் வீதத்தில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்:-

(i) 2025, ஏப்பிறல் 1 ஆந்தேதிக்குமுன்னர், 40 % ; அத்துடன்

(ii) 2025, ஏப்பிறல் 1 ஆந்தேதியிலிருந்து பயனுறுவதாக, 45%; அத்துடன்"; அத்துடன்

(ஈ) அப்பந்தியின் (5) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(6) உட்பந்தி (1ஈ) இன் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஒரு தனியாளின் பின்வரும் ஈட்டுகைகளுக்கும் இலாபங்களுக்கும் 2025, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக 15% என்ற அதிகபட்ச வீதத்தில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) இலங்கைக்கு வெளியே பயன்படுத் தப்படுவதற்கு எவரேனுமாளுக்கு இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே அளிக்கப்பட்ட எவையேனும் சேவைகளுக்கான கொடுப்பனவு வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட்டு ஒரு வங்கியினூடாக இலங்கைக்கு அனுப்பப்படுமிடத்து, அத்தகைய சேவையிலிருந்து ஈட்டப்பட்ட அல்லது பெறப்பட்ட ஈட்டுகைகளும் இலாபங்களும்;

(ஆ) ஏதேனும் வெளிநாட்டு மூலத்தி லிருந்து ஈட்டப்பட்ட அல்லது

பெறப்பட்ட ஈட்டுகைகளும் இலாபங்களும் வெளிநாட்டு நாணயத்தில் ஈட்டப்பட்டு அல்லது பெறப்பட்டு ஒரு வங்கியினூடாக இலங்கைக்கு அனுப்பப்படுமிடத்து அத்தகைய ஈட்டுகைகளும் இலாபங்களும்.";

(2) அவ்வட்டவணையின் 4 ஆம் பந்தியில்-

(அ) அப்பந்தியின் (1) ஆம் உட்பந்தியில், "உட்பந்திகள் (2), (2அ), (2ஆ) மற்றும் (3) இற்கு அமைய," என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "உட்பந்திகள் (2), (2அ), (2ஆ), (2இ) மற்றும் (3) இற்கு அமைய," என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(ஆ) அப்பந்தியின் (2ஆ) என்னும் உட்பந்தியில், "2023, ஏப்பிறல் 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2023, ஏப்பிறல் 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 2025, ஏப்பிறல் 1 ஆந்தேதிக்குமுன்னர் தொடங்குகின்ற" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(இ) அப்பந்தியின் (2ஆ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(2இ) 2025, ஏப்பிறல் 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்காக எந்தக் கம்பெனி அதன் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தில் ஒரு கம்பெனியின் ஈட்டுகைகளையும் இலாபங்களையும் உள்ளடக்குகின்றதோ அந்த ஒரு கம்பெனியின் பின்வரும் ஈட்டுகைகளினதும் இலாபங்களினதும் அத்தகைய பாகத்துக்குப் பின்வரும் வீதங்களில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) இலங்கைக்கு வெளியே பயன் படுத்தப்படுவதற்கு எவரேனு மாளுக்கு இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே அளிக்கப்பட்ட எவையேனும் சேவைகளுக்கான கொடுப்பனவு வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட்டு ஒரு வங்கியினூடாக இலங்கைக்கு அனுப்பப்படுமிடத்து, அத்தகைய சேவையிலிருந்து ஈட்டப்பட்ட அல்லது பெறப்பட்ட ஈட்டுகைகளும் இலாபங்களும் - 15%;

(ஆ) ஏதேனும் வெளிநாட்டு மூலத்தி லிருந்து ஈட்டப்பட்ட அல்லது பெறப்பட்ட ஈட்டுகைகளும் இலாபங் களும் வெளிநாட்டு நாணயத்தில் ஈட்டப்பட்டு அல்லது பெறப்பட்டு ஒரு வங்கியினூடாக இலங்கைக்கு அனுப்பப்படுமிடத்து, அத்தகைய ஈட்டுகைகளும் இலாபங்களும் - 15% ;

(இ) பந்தயம் பிடித்தலும் சூதாட்டமும் நடாத்துவதிலிருந்தான ஈட்டுகை களும் இலாபங்களும் - 45% ; அத்துடன்

(ஈ) ஏதேனும் மதுபான அல்லது புகையிலைத் தயாரிப்பின் ஏற்றுமதி தவிர்ந்த அத்தகைய தயாரிப்பின் உற்பத்தியிலிருந்தும் விற்பனையிலிருந்தும் அல்லது இறக்குமதியிலிருந்தும் விற்பனை யிலிருந்துமான ஈட்டுகைகளும் இலாபங்களும் - 45% ; அத்துடன்

(3) அவ்வட்டவணையின் 10 ஆம் பந்தியின் (1) ஆம் உட்பந்தியின் (ஈ) (ii) என்னும் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன்மூலமும்:-

"(ii) பின்வருமாறு செலுத்தப்பட்ட வட்டி அல்லது கழிப்பனவு:-

(அ) 2023, சனவரி 1 ஆந்தேதியிலிருந்து பயனுறுவதாக, ஆனால் 2025, ஏப்பிறல் 1 ஆந்தேதிக்கு முன்னர் - 5% ;

(ஆ) 2025, ஏப்பிறல் 1 ஆந்தேதியிலிருந்து பயனுறுவதாக - 10%;".

**4.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான மூன்றாம் அட்டவணை, அவ்வட்டணையின் (ப) என்னும் பந்தியில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான மூன்றாம் அட்டவணையைத் திருத்துதல்

(1) அப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியில், "2020, சனவரி 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2020, சனவரி 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 2025, ஏப்பிறல் 1 ஆந்தேதிக்கு முன்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அப்பந்தியின் (iv) ஆம் உட்பந்தியில், "2020, சனவரி 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2020, சனவரி 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 2025, ஏப்பிறல் 1 ஆந்தேதிக்கு முன்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

**5.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான ஐந்தாம் அட்டவணை, அதன் பந்தி 2 இன் (அ) என்னும் உட்பந்தியில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான ஐந்தாம் அட்டவணையைத் திருத்துதல்

(1) அவ்வுட்பந்தியின் (iii) ஆம் விடயத்தில், "300,000 ரூபா; அத்துடன்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "300,000 ரூபா;" என்னும் சொல்லையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(2) அவ்வுட்பந்தியின் (iv) ஆம் விடயத்தில், "2023, ஏப்பிறல் 1 ஆந்தேதியன்று அல்லது

அதன்பின்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு மதிப்பீட்டாண்டுக்காகவும் 1,200,000 ரூபா” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக “2023, ஏப்பிறல் 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 2025, ஏப்பிறல் 1 ஆந்தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு மதிப்பீட்டாண்டுக்காகவும் 1,200,000 ரூபா; அத்துடன்” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அவ்வுட்பந்தியின் (iv) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன்மூலமும்:-

“(v) 2025, ஏப்பிறல் 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு மதிப்பீட்டாண்டுக்காகவும் 1,800,000 ரூபா.”.

**6.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.